இதற்கிடையில் இப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சி மன்றங்கள் பேரூராட்சிகள், ஊராட்சி மன்றங்கள் வந்து விட்டன. இருக்கின்ற நடை முறைகளின்படியும், சட்டத்தின் படியும் வரிவிதிப்பு அதிகாரம் மீண்டும் நகராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும் தரப்பட வேண்டும் என்பதும் ஏற்கனவே அரசு ஆணையின்படி மாற்றியமைக்கப்பட்ட சொத்து வரியை அமுல் செய்யவேண்டாம் என்றும் 1-4-1987 முதல் அமுல் செய்யக்கூடாது என்றும், அந்த ஆணையை திரும்ப பெறவேண்டும் என்றும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நேற்றையதினம் உத்திரவு இட்டிருக்கிறார்கள் என்கின்ற மகிழ்ச்சியான செய்தியை நான் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள் நகராட்சி மன்றங்கள், அவர்களுக்குரிய அதிகாரத்தின் கீழ் நிதி வருவாயைத் தேடிக்கொள்ள வேண்டும். பற்றாக்குறை ஏற்படுமானால், அரசினிடத்திலே அவர்கள் வருகிறபோது எந்த அளவுக்கு நிதி ஆதாரங்களைத் திரட்டியிருக்கிறார்கள், எவ்வாறு நிதியைச் செலவழித்து இருக்கிறார்கள், எவ்வாறு நிர்வாகம் செய்து இருக்கிறார்கள் என்று, எப்படி மத்திய அரசு மாநில அரசைக்கேட்டு, கடனும், மானியமும் தருகிறதோ அதே போல் உள்ளாட்சி மன்றங்களுக்கும் இந்த அரசு வழங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) 'முட்டாள்கள் தினம்' என்பதால் எழுப்பப்பட்டவை.

திரு. கி. மனோகரன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீக்கியாகிவிட்டது. நீங்கள் எதைச்சொல்லப் போகிறீர்கள் என்று தெரியும். (குறுக்கீடு). முட்டாள்கள் தினம் சம்பந்தப்பட்ட விவாதங்கள் எல்லாமே நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) நீக்கப்பட்டு விட்டது.

(ஈ) சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் தண்ணீர் வசதி.

திரு. பொ.உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய விடுதிகளில் மூன்று முறையாக தண்ணீர் வழங்கப்படும் என்று ஒரு சுற்றறிக்கை வந்துள்ளது. சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிகளில் காலை, மத்தியானம், சாயந்திரம் மூன்று தடவை தண்ணீர் கிடைப்பதாக அறிவிக்கப்பட்டது ஒரு வார காலமாக, காலை 10 மணிக்குப் பிறகு மறுநாள் காலை 6 மணிக்குத் தான் தண்ணீர் வருகிறது. இன்றைக்கு 8 மணிக்கே எல்லா விடுதிகளிலும் தண்ணீர் நின்று விட்டது. பாதி குளித்தும், குளிக்காமலும் வந்து இருக்கிறோமே, உடனடியாக தண்ணீர் கிடைப்பதற்கு ஆவன செய்யப்படுமா? அல்லது குளிக்காமலேயே சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்திற்கு வருவதா என்று அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டும். (குறுக்கீடுகள்.)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.